

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் சே.பிரேம் ஆனந்த் ஏற்பாட்டில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ம.ராஜி, காயத்ரி ஸ்ரீதரன், பா. நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், வி.குமார், காஞ்சனா சுதாகர், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் நிர்வாகிகள் சன் பிரகாஷ், த.தங்கம் முரளி, ஜி.நாராயண பிரசாத், ஞா.ரமேஷ், மு. ராஜா, ப. மகேஸ்வரி பால விநாயகம், எ.குட்டி(எ) பக்தவச்சலு, ஆர் திலீப் ராஜ், இ.என்.சேகர் உள்பட பலர் உள்ளனர்.

அமைச்சர்கள் அர.சக்கரபாணி - சிவ.வீ.மெய்ய நாதன் - அப்துல்லா எம்.பி. பங்கேற்பு!

## அகில இந்திய மகளிர் அணி கபடி போட்டி!

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைக்கிறார்!

சிவகங்கை, ஆக. 28 - சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நாகப்பா மருதப்பாபெண்கள் மேல் நிலைப்பள்ளியில் திருப்பத்தூர் ஒன்றிய, பேரூர் கழகம் மற்றும் சார்புஅணிகள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு, கழக தலைவர் தளபதி அவர்கள் பிறந்த நாள் விழா, கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் ஆகிய முப்பெரும் விழாவினை முன்னிட்டு ஐந்தாவது ஆண்டு அகில இந்திய மகளிர் அணி கபடி விளையாட்டு போட்டி ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 30, 31, 1 ஆகிய மூன்று நாட்கள் நடைபெறுகிறது. 30ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் நடைபெறும் கபடி போட்டிகளை மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுற வுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் துவக்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் உணவு அமைச்சர் அர.சக்கரபாணி, சுற்றுசூழல் கால நிலையத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். இந்த விளையாட்டுப் போட்டிகளில் குஜராத், மும்பை, கர்நாடகா, கேரளா, ஆந்திரா, பாண்டிச்சேரி உள்பட பல்வேறு மாநிலங்களிலும் இருந்து கபடி வீரர்கள் பங்கேற்கிறார்கள். விளையாட்டு. போட்டிக்கான ஏற்பாடுகளை விழாக்குழு நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால் தமிழ்நாட்டைப் பழிவாங்கும் ஒன்றிய அரசு

## தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.573 கோடியை வழங்காமல் நிறுத்தி வைப்பு!

### கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் – ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 28 - புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால் தமிழ்நாடு கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய 573 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்தி வைத்துள்ளது. பழிவாங்கும் இந்த நடவடிக்கைக்கு கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒன்றிய அரசின் சமக்ரா ஷிக்ஷா அபியான் திட்டம் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பள்ளிக்கல்வித்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் 60 சதவிகித நிதியிலும், மாநில அரசுகளின் 40 சதவிகித நிதியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 4 தவணைகளாக தனது பங்கு நிதியை ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் ஒன்றிய அரசோ இத்திட்டத்திற்கு உரிய நிதியை வழங்காமல் மாநிலங்களை இழுத்தடித்து வருகிறது.

இதனால் மாநிலங்களின் நிதியிலேயே இத்திட்டம் முழுமையாக செயல்படும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய கல்விக் கொள்கையை ஏற்காத தமிழ்நாட்டை பழிவாங்கும் நோக்கில், இத்திட்டத்திற்கு தமிழ்நாட்டுக்கான நிதியை விடுவிக்காமல் ஒன்றிய அரசு அலட்சியம் காட்டி வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாட்டுக்கு 3 ஆயிரத்து 586 கோடி ரூபாய் நிதி அறிவிக்கப்பட்டது. இதில், 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் ஒன்றிய அரசின் 60 சதவிகித நிதியாகும். ஆயிரத்து 434 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசின் 40 சதவிகித நிதியாகும். ஒன்றிய அரசின் நிதியில், முதல் கட்டமாக வழங்க வேண்டியது 573 கோடி ரூபாயாகும். ஆனால் இந்த நிதியை தமிழ்நாட்டுக்கு வழங்காமல் ஒன்றிய அரசு பழிவாங்கி வருகிறது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு பல முறை கடிதங்கள் மூலம் வலியுறுத்தியும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து வலியுறுத்தியும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தமிழ்நாடு அரசின் நிதியிலேயே ஒன்றிய அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக தமிழ்நாடு அரசுக்கு நிதிச் சுமை அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசின் செயலால், இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் ஊதியம் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டை பழிவாங்கும் ஒன்றிய பா.ஜ.க., அரசின் செயலுக்கு கல்வியாளர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். நிதியை உடனே விடுவிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சிவகங்கை மாவட்டம்

## மானாமதுரை தொகுதியில் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஆக. 28 - சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் - முதல்வர் தளபதி அவர்கள் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்தி டுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி நாளை (29.08.2024 - வியாழக் கிழமை) சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை தொகுதியில் கீழ் கண்டவாறு ஒன்றிய, பேரூர், நகர கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்கும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

அந்தந்த பகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாள். 29.08.2024 - வியாழக் கிழமை .. நேரம் காலை 10.00, மணி. இடம். டிஆர் மஹால். திருப்புவனம். திருப்புவனம் கிழக்கு, மேற்கு திருப்புவனம் பேரூர். மானாமதுரை. நேரம். பகல்.12.00 மணி . இடம். எம்.எஸ். பி.ஏ. உண்ணாமலை திருமண மண்டபம். புதிய பேருந்து நிலையம் அருகில். மானாமதுரை கிழக்கு மேற்கு, ஒன்றியங்கள், மானாமதுரை நகரம், இளையான்குடி. நேரம். மாலை. 4.00மணி.இடம் எம்.எம். மஹால் இளையான்குடி இளையான்குடி கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஒன்றியங்கள்.. இளையான்குடி பேரூர் கழகம். இத்தகவலை மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் அறிவித்துள்ளார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.டி.எஸ். மணி

### ஆகஸ்ட் 28 (1993)



செங்கல்பட்டு மாவட்டத்தின் தி.மு.க. முன்னோடிகளில் ஒருவர். தி.மு.க நடத்திய பல போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவர்.

செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகவும் காஞ்சிபுரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

100 ஆண்டுகள் கடந்த கும்பகோணம் வாணி விலாச சபாவில்

## முத்தமிழறிஞர் கலைஞரின் மனோகரா திரைப்படம் திரையிடப்பட்டது!

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி. ஏற்பாட்டில்!

தஞ்சாவூர், ஆக. 28 - கும்பகோணத்தில் உள்ள நூறு ஆண்டுகள் கடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாணி விலாச சபாவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட மனோகரா திரைப்படம் திரையிடப்பட்டது.

வாணி விலாச சபாவின் செயலாளரும் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி. ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞர் அவர்களின் படைப்பாற்றலை போற்றும் விதத்தில், இக்கால இளைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் உணர்ச்சிகரமான கலைஞருடைய மனோகரா திரைப்படம் திரையிடப்பட்டது.

இந்நிகழ்வில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் துணை மேயர் சுப.தமிழழகன், கும்பகோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர், தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவருமான எஸ்.கே.முத்துச்செல்வம், வலங்கைமான் ஒன்றியச் செயலாளர் க.அன்பரசன், சபாவின் நிர்வாகிகள் கே.கே.எஸ்.ராஜா, சோழா மகேந்திரன், வீரபாண்டியன், சதக்கத்துல்லா, பாலு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் க.செந்தில் குமார், அரசு வழக்கறிஞர் பா.விஜய குமார், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் கனமழை வாய்ப்பு!

சென்னை, ஆக. 28- தமிழ்நாட்டில் இன்று முதல் ஆகஸ்ட் 30 ஆம் தேதி வரை கன மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை உள்பட தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக பரவலாக மிதமான மழை பெய்து வரும் நிலையில் இன்று முதல் 30 ஆம் தேதி மிதமான மழை முதல் கனமழை வரை தமிழகத்தில் பரவலாக மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு புதுச்சேரி காரைக்கால் ஆகிய பகுதிகளில் ஆகஸ்ட் 30 ஆம் தேதி வரை மழை பெய்யும் என்றும் சென்னை மற்றும் புறநகர் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் சில பகுதிகளில் விடை மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கழகத்தை ஆளுகின்ற கதிரவனே நீ வாழ்க!

### (28.08.2018 – தி.மு.க. தலைவராகப் பொறுப்பேற்ற தளபதியார் ஏழாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறார் இன்று)



பேர்தலைமைப் பொறுப்பேற்ற ஆண்டோ ஏழாம் !
பெருங்கழகம் தழைத்தோங்கத் தோளில் தூக்கிப்
பாராள நிற்பவனே! கலைஞர் தொட்ட
பாரம்சு மப்பவனே! அய்யா ஸ்டாலின்!
சீராளும் மக்கட்கே தொண்டு செய்யச்
சிங்கமென எழுந்தவனே! பெரியார், அண்ணா
மார்தைத்த கொள்கையினில் பரணிப் பாட்டை
மூச்சாகக் கொண்டவனே! வெல்க! வாழ்க!

பொறுப்பேற்றாய்! புகழ்சேர்த்தாய்! கழகம் பற்றிப்
புவனத்தைப் பேசவைத்தாய்! மின்னல் வேகச்
சுறுசுறுப்பால் வரலாறு பலப டைத்தாய்!
சாதனைகள் கல்வெட்டில் பொறித்தாய்; வென்றாய்!
குறுமனத்தார் நிதம்தூற்றிப் பழித்தார்! ஆனால்
குவலயத்தின் கண்களைநீ திறக்க வைத்தாய்!
முறுவலித்தாய்! எதிரிகளின் படைநொ றுக்கி
முன்னேற்றக் கழகத்தால் வியக்க வைத்தாய்!

கலைஞரில்லை; கவிழ்ந்ததுகாண் கழக மென்றார்!
கட்டெறும்பா தேன்கூடு கட்டும்? என்றார்!
தலைவனில்லா இயக்கமென்றார்! வீழ்ந்த தென்றார்!
சக்கரத்தின் கடையாணி கழன்ற தென்றார்!
குலைகுலுங்கும் மரம்பட்டுப் போன தாலே
காய்கனிகள் ஏதென்றார்! மலட்டுத் தாய்தான்
முலைப்பாலைத் தருவாளா? பகைவர் சொன்னார்!
முத்துவேலர் பேரனுனை இகழ்ந்தே நின்றார்!

மீகாம னில்லாத கப்பல் என்றார்!
மீண்டெழுமா இனிக்கழகம்? என்றார்! தங்கம்
ஆகாது தகரமென்றார்! பூத்தக் காட்டை
அழிப்பதற்கே தீக்கங்கு பற்றா தென்றார்!
போகாது எதிர்காலத் திசைக ளென்றார்!
போர்க்களத்தில் வருதேர்தல் வெல்லா தென்றார்!
நாக்கூசும் மிகுவார்த்தை நச்சு மிழ்ந்தே
நடவுசெய்தார்! நாள்தோறும் பிதற்றி நின்றார்!

நீரில்லா ஆறுபயன் தருமா ? என்றார் !
நீயோகார் முகிலாகிப் பொழிந்தாய்! ஆணி
வேரில்லா மரமென்றார்; இகழ்ந்தார்! நீயோ
விழுதானாய்! விரிபடர்ந்த கிளைகள் ஆனாய்!
கூரில்லாக் கருவியென்றார்! நீயோ வாளாய்க்
குத்துகின்ற ஈட்டியானாய்! படைக்க ளத்தைச்
சீராட்டித் தொண்டர்கை வலிமை சேர்த்தாய்!
சிறுமதியர் உன்பணியைக் கண்டே தோற்றார்!

கொற்றவனோ மண்படுத்தான், அதனால் நாட்டின்
கொடிமரமும் சாய்ந்ததுவே என்றார் கூவி!
வெற்றிடந்தான் தமிழகத்தில் என்றார்! எங்கும்
வெறிக்கூச்சல் தம்பட்ட முழக்க மிட்டார்!
புற்றீசல் போலிங்கே வான்ப றந்தே
புவிமீது பொய்மனத்தார் வீழ்ந்தார்! மாய்ந்தார்!
சுற்றிநின்ற பகைக்கூட்டம் தோற்றே உன்றன்
சுட்டுவிழிப் பார்வையாலே புதைந்த தன்றோ!

உதிர்இலைகள், தாமரைகள் ஒன்று கூடி
உதயசூரி யனைவசைப் பண் பாடிற் றே! நேர்
எதிர்நின்ற தேர்தல்க ளத்தில் யாவும்
எரிந்ததுவே கரிசாம்பல் மேடா யிற்றே!
பொதிசுமக்கும் கழுதைகளா புரவி யாகும்?
புழுதிமழைக் காளான்கள் குடைகள் ஆமோ?
நதிசுமக்கும் மலக்குப்பை மணமா வீசும்?
நிசிக்கூகை அலறலா குயில்பாட் டாகும்?

மணிவிளக்கே! மாமுகிலே! முத்து வேலர்
மரபுவந்த முக்கனியே! கழக மன்னா!
பிணிநீக்கும் அருமருந்தே! கலைஞர் பெற்ற
புலிப்போத்தே! தொண்டருளங் காதல் கொண்ட
தணிகைமலைத் தார்வேந்தே! தங்கத் தேரே!
தண்டலையே! இயக்கத்தின் பூந்தேன் தாதே!
அணிவகுப்பே! புறப்பாட்டே புகழ்ப டைக்கும்
அடலேறாம் காளையர்கள் வாழ்த்த வாழ்க!



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்